# பயங்கரவாதத் தடுப்பில் இரட்டை நிலை கூடாது

புது தில்லி, ஜூலை 4: 'பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் எந்த நாடும் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கக் கூடாது' என்று ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (எஸ்சிஓ) மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

பாகிஸ்தானை மறைமுகமாகக் குறிப்பிட்டுப் பேசிய பிரதமர் மோடி, பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளைக் கண்டிக்கத் தவறக் கூடாது என்றும் தெரிவித்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் ரஷியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ் குடியரசு ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. அந்தக் கூட்டமைப்புக்கு நடப்பாண்டில் இந்தியா தலைமை வகித்து வருகிறது. கடந்த 2017-ஆம் ஆண்டில் எஸ்சிஓ கூட்டமைப்பில் இணைந்த இந்தியா, முதல்முறையாக அதன் தலைமைப் பொறுப்பை வகிக்கிறது.

இந்நிலையில்,எஸ்சிஓநாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டை இந்தியா செவ்வாய்க்கிழமை தலைமையேற்று நடத்தியது. காணொலி மூலம் நடைபெற்ற மாநாட்டில், சீன அதிபர் ஷி ஜின்பிங்,ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் தலைமை உரையாற்றிய பிரதமர் மோடி கூறியதாவது: பிராந்திய, சர்வதேச அமைதிக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலாக பயங்கரவாதம் மாறியுள்ளது. பயங்கரவாதச் செயல்கள், அவற்றுக்கு நிதியுதவி அளிப்பது உள்ளிட்டவற்றுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எஸ்சிஓ கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும். பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் கூட்டமைப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

சில நாடுகள் தங்களது கொள்கைகளைப் பரப்புவதற்கு எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி வருகின்றன. அந்த நாடுகள் பயங்கரவாதிகளுக்குப் புகலிடமாகவும் திகழ்கின்றன. பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அத்தகைய நாடுகளைக் கண்டிக்க எஸ்சிஓ கூட்டமைப்பு தவறக் கூடாது. பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் இரட்டை நிலைப்பாடு கூடாது.

## எஸ்சிஓ மாநாட்டில் பிரதமர் மோடி



காணொலி மூலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற எஸ்சிஓ மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி. உடன், உறுப்பு நாடுகளின் தலைவர்கள்.

**ஒருங்கிணைந்த செயல்பாடு:** நோய்த்தொற்று பரவல், போர் பதற்றம் உள்ளிட்ட பலதரப்பட்ட சர்வதேச சவால்களுக்கு மத்தியில் உணவு, உரம், எரிபொருள் உள்ளிட்டவற்றின் விநியோகச் சங்கிலி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால், உலக நாடுகள் அனைத்தும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றன. அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்குக் கூட்டமைப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**ஆப்கானிஸ்தான் விவகாரம்:** மற்ற நாடுகளில் பயங்கரவாதச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான தளமாக ஆப்கானிஸ்தான் பயன்படுத்தப்படக் கூடாது. அந்த நாட்டு மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பது, அந்நாட்டில் அனைவரையும் உள்ளடக்கிய அரசு அமைவது, பயங்கரவாதச் செயல்களையும், போதைப் பொருள்கள் கடத்தலையும் அந்நாட்டு அரசு தடுப்பது, பெண்கள், சிறார்கள், சிறுபான்மையினருக்கான உரிமைகளை அந்நாட்டு அரசு வழங்குவது ஆகியவற்றை எஸ்சிஓ நாடுகள் வலியுறுத்துகின்றன.

**புதிய உச்சத்தில் ஒத்துழைப்பு:** எஸ்சிஓ கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகளுடன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கலாசாரத் தொடர்பை இந்தியா கொண்டுள்ளது. கூட்டமைப்பு நாடுகளிடையே நிலவும் பலதரப்பட்ட ஒத்துழைப்பை புதிய உச்சத்துக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை எஸ்சிஓ தலைமைப் பொறுப்பில் இருந்து இந்தியா மேற்கொண்டது.

ஸ்டார்ட்-அப் (புத்தாக்கம்), பாரம்பரிய மருந்துப் பொருள்கள், இளைஞர்களின் திறன் மேம்பாடு, எண்ம ஒருங்கிணைப்பு, பௌத்த பாரம்பரியம் ஆகியவற்றில் கூட்டமைப்பு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டது. ஐரோப்பிய, ஆசிய கண்டங்களைச் சேர்ந்த நாடுகளில் அமைதி, வளர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான முக்கியக் கூட்டமைப்பாக எஸ்சிஓ உருவெடுத்துள்ளது.

**சீர்திருத்தம் அவசியம்:** எஸ்சிஓ கூட்டமைப்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், கூட்டமைப்பை நவீனப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கிறது. எதிர்காலத் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் கூட்டமைப்பு சீரமைக்கப்பட வேண்டும். ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச கூட்டமைப்புகளில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தவும் எஸ்சிஓ ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

கூட்டமைப்பு நாடுகளுக்கு இடையேயான தேவைகளைப் புரிந்துகொண்டு, சவால்களுக்குத் தீர்வுகாண நாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம். எஸ்சிஓ கூட்டமைப்பு விதிகளை மதித்து அனைத்து நாடுகளும் செயல்பட வேண்டும். மற்ற நாடுகளின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை அனைத்துநாடுகளும்மதிக்கவேண்டும் என்றார் பிரதமர் மோடி.

## பிராந்திய அமைதியை உறுதிப்படுத்த சீன அதிபர் ஷி ஜின்பிங் வலியுறுத்தல்

பெய்ஜிங், ஜூலை 4: ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (எஸ்சிஓ) மாநாட்டில் அமெரிக்காவை மறைமுகமாகக் குறிப்பிட்டுப் பேசிய சீன அதிபர் ஷி ஜின்பிங், அதிகார அரசியலுக்கு ஆதரவளிக்காமல் உறுப்பு நாடுகள் அனைத்தும் பிராந்திய அமைதியை உறுதிப்படுத்துவதற்காக ஒருங்கிணைய வேண்டும் என்றார்.

எஸ்சிஓ கூட்டமைப்பின் 23-ஆவது மாநாட்டை இந்தியா செவ்வாய்க்கிழமை நடத்தியது. அதில் காணொலி வாயிலாகக் கலந்து கொண்ட சீன அதிபர் ஷி ஜின்பிங், 'மேலாதிக்கம், அதிகார அரசியல் ஆகியவை இல்லாமல் சர்வதேச நிர்வாகம் முறையாகவும் சமத்துவத்துடனும் திகழ வேண்டும். பிராந்திய அமைதி, பொதுவான பாதுகாப்புச் சூழல் ஆகியவற்றை உறுதி செய்வதற்குக் கூட்டமைப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு இடையேயான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சீனா அமல்படுத்தி வரும் சாலை வழித் தட திட்டத்துக்கு (பிஆர்ஐ) கூட்டமைப்பு நாடுகள் ஆதரவளிக்க வேண்டும். அந்தத் திட்டத்தின் கீழ் உறுப்பு நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால், பிராந்திய வளர்ச்சிக்கு அது வழிவகுக்கும்' என்றார்.

பலகோடி முதலீட்டுடன் சீனா அமல்படுத்தி வரும் பிஆர்ஐ திட்டத்தை இந்தியா கடுமையாக எதிர்த்து வருகிறது. அத்திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயல்படுத்தப்பட்டு வரும் சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித் தடத் திட்டம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாகச் செல்வதையும் இந்தியா கடுமையாக எதிர்த்து வருகிறது.

பல நாடுகளைக் கடன்வலையில் சிக்க வைக்க அத்திட்டத்தை சீனா செயல்படுத்தி வருவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில், இந்தியா தலைமையேற்று நடத்திய மாநாட்டிலேயே பிஆர்ஐ திட்டம் குறித்து சீன அதிபர் ஜின்பிங் பேசியுள்ளது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## புதிய உறுப்பினர் ஈரான்

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் 9-ஆவது உறுப்பு நாடாக ஈரான் இணைந்தது.

இந்தியா தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற எஸ்சிஓ மாநாட்டில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி கலந்துகொண்டார்.

கூட்டமைப்பில் ஈரான் இணைந்தது குறித்து பிரதமர் மோடி கூறுகையில், 'சாபஹார் துறைமுகத்தை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு இனி ஈரானுடன் நெருக்கிப் பணியாற்ற முடியும். சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடமானது இந்தியப் பெருங்கடலைப் பாதுகாப்பாக அமைய மத்திய ஆசிய நாடுகளுக்கு வழிவகுக்கும்' என்றார்.

எஸ்சிஓ கூட்டமைப்பில் பெலாரஸை உறுப்பு நாடாக இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் மாநாட்டில் தொடங்கப்பட்டன. அந்த நாடு அடுத்த ஆண்டு நடைபெறும் மாநாட்டில் கூட்டமைப்பின் 10-ஆவது உறுப்பு நாடாக இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# துலுக்கர்பட்டி அகழாய்வு தளத்தில் தமிழி எழுத்துகளுடன் மண்பானை ஓடுகள்

வள்ளியூர்/சென்னை, ஜூலை 4: திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அருகே உள்ள துலுக்கர்பட்டி அகழ்வாராய்ச்சி தளத்தில் தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மேலும் சில மண்பானை ஓடுகள் திங்கள்கிழமை கிடைத்துள்ளன.

தொல்லியல் துறை சார்பில் துலுக்கர்பட்டியில் அகழாய்வு நடைபெற்று வருகிறது. இங்கு முதல்கட்ட அகழாய்வில் கிடைக்கப் பெற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்பொருள்கள், தில்லியில் உள்ள அகழ்வாராய்ச்சி தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்போது 2- ஆம் கட்ட அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது.

இதில், இதுவரை 1,100-க்கும் மேற்பட்ட தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. செம்பு மோதிரம், இரும்பிலான பொருள்கள், சுடுமண் விளையாட்டுப் பொருள்கள்(சில்லுகள் மற்றும் சதுரங்க காய்கள்), தக்களி, கார்னிலியன்(சூதுபவளம்) மணிகள், நீலக்கல் மணி, கண்ணாடி மணிகள், பளிங்கு கல்மணிகள் ஆகிய முக்கிய தொல்பொருள்களும் கிடைத்துள்ளன.



வள்ளியூர் அருகே உள்ள துலுக்கர்பட்டி தொல்லியல் அகழ்வாராய்ச்சி தளத்தில் கிடைத்துள்ள தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண்பானை ஓடுகள்.

இதுதவிர தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள், வெண்மை நிறத்தினால் அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள், கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், தாழிகள் ஆகியன அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன.

மேலும், புலி என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு அண்மையில் கிடைத்தது. இதன் தொடர்ச்சியாக தற்போது கு விர (ன்), தி ஈ ய மற்றும் தி ச என தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள சான்றுகள், நம்பியாற்றங்கரையில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தறிவு பெற்ற தமிழ் சமூகம் வாழ்ந்து வந்ததற்கு சான்றாகும் என தொல்லியல் அகழாய்வு இயக்குநர் வசந்தகுமார், இணை இயக்குநர் காளீஸ்வரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

### அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்

இது குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு ட்விட்டரில் திங்கள்கிழமை வெளியிட்ட பதிவு:

திருநெல்வேலி மாவட்டம், துலுக்கர்பட்டியில் பானை ஓடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நம்பியாற்றின் கரையில் எழுத்தறிவு பெற்ற தமிழ்ச் சமூகம் தனக்கே உரிய நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளோடு வாழ்ந்து வந்தமைக்கு இது நல்ல சான்று என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ஜிஎஸ்டி–இலக்கை நோக்கி!

சரக்கு – சேவை வரி (ஜிஎஸ்டி) அறிமுகமாகி ஆறு ஆண்டு நிறைவு பெற்றிருக்கிறது. ஏழாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்போது, மாதாந்திர ஜிஎஸ்டி வருவாய் சராசரியாக ரூ.1.5 லட்சம் கோடியை எட்டியிருப்பது மிகப்பெரிய வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். முந்தைய மன்மோகன் சிங் அரசால் முன்மொழியப்பட்டு, அறிமுகப்படுத்துவதில் கணக்கம் காட்டப்பட்ட ஜிஎஸ்டி–யை, நரேந்திர மோடி அரசு எதிர்ப்புகளைத் துணிந்து எதிர்கொண்டு அறிமுகப்படுத்தியபோது, இந்த அளவுக்கு வெற்றிபெறும் என்று பலரும் எதிர்பார்க்கவில்லை.

மத்திய – மாநில அரசுகளின் 17 வரிகளையும், 13 கூடுதல் வரிகளையும் (செஸ்) அகற்றி, அதற்கு பதிலாக 2017 ஜூலை 1–ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டதுதான் ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு – சேவை வரி. மறைமுக வரிகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தி, வரி விதிப்பை நுகர்வோருக்கும், உற்பத்தியாளர்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் சாதகமாக்கும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதுதான் ஜிஎஸ்டி.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கட்டங்களில், சிறு வியாபாரிகள் மத்தியில் அதற்கு எதிர்ப்பு காணப்பட்டது. இப்போது, ஆறு ஆண்டு கடந்துவிட்ட நிலையில், சந்தேக மேகங்கள் கலைந்து, எதிர்ப்பும், விமர்சனமும் பொய்த்து, ஜிஎஸ்டி என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரிவிதிப்பாக மாறியிருக்கிறது.

முன்பு விற்பனை வரி, மதிப்புக்கூட்டப்பட்ட வரி என்று பல்வேறு மறைமுக, பல்முனை வரிகள் நிலவின. ஒவ்வொரு பொருளின் மீதும் வெவ்வேறு வரிகள் விதிக்கப்பட்டு, எந்தவொரு பொருளும், சேவையும் பல முனை வரி விதிப்பால் வாடிக்கையாளர் மீதான சுமையாக மாறியது. ஜிஎஸ்டி அறிமுகத்துக்குப் பிறகு, வரிக்கு மேல் வரி என்பது அகற்றப்பட்டு, மதிப்புக் கூட்டப்பட்ட பகுதி மட்டுமே வரி வரம்புக்குள் வந்தது.

மூலப்பொருளுக்கு வழங்கப்பட்ட வரியைத் திரும்பப் பெறும் 'இன்புட் டாக்ஸ் கிரெடிட்' முறையால், உற்பத்தியாளர், விநியோகஸ்தர், சில்லறை விற்பனையாளர் என அனைவரும் அவரவர் பங்குக்கான வரியை மட்டுமே செலுத்தும் வசதி ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக நுகர்வோர் பயனடைந்திருக்கிறார்கள்.

இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான வரி விதிப்பும், வரி விதிப்பு தொடர்பான சட்டங்களும், விதிமுறைகளும் இருப்பதால், எந்தவொரு தொழிலையோ, சேவையையோ மேற்கொள்வதில் தெளிவும், வரி செலுத்துவதில் ஒரே மாதிரியான நடைமுறையும் ஜிஎஸ்டி உருவாக்கி இருக்கும் நன்மைகள். அதிகாரிகள் தலையீடு இல்லாத இணையவழிப் பரிமாற்றம் கையூட்டுக்கு இடமளிக்காத நிலையை உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, மாநிலத்துக்கு மாநிலம் காணப்பட்ட சோதனைச்சாவடிகளுக்கு வேலையில்லாமல் போய்விட்டது. அதன் மூலம் சரக்கு லாரிகள் மாநிலத்துக்கு மாநிலம், நகரத்துக்கு நகரம் கடக்கும்போது கைமாற்ற வேண்டிய கையூட்டுக்கு விடை கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநிலங்களுக்கு இடையே எடுத்துச் செல்லப்படும் சரக்குகளின் அளவு 44% அதிகரித்திருக்கிறது.

முந்தைய வாஜ்பாய் ஆட்சியில் முன்னெடுக்கப்பட்டு, மன்மோகன் சிங் ஆட்சியிலும், இப்போதைய நரேந்திர மோடி அரசாலும் விரிவுபடுத்தப்பட்ட தங்க நாற்கரச் சாலைகளின் கட்டமைப்பு, ஜிஎஸ்டி வரிவிதிப்பு அறிமுகத்துக்குப் பிறகு, சரக்கு போக்குவரத்துக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

ஜிஎஸ்டி அல்லது மதிப்பு கூட்டப்பட்ட வரிவிதிப்பு முறை உலகில் 175 நாடுகளில் நடைமுறையில் இருக்கிறது. 1954–இல் பிரான்ஸில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வரிவிதிப்பு முறையின் அடிப்படை , எந்தவொரு பொருளுக்கும் மதிப்பு அதிகரிப்புக்கு மட்டுமே வரி விதிப்பது என்பதுதான். எல்லா நாடுகளிலும் 'இன்புட் டாக்ஸ் கிரெடிட்' வழிமுறை பின்பற்றப்படுகிறது. நடைமுறைகளிலும், வரி விதிப்பிலும் மாற்றங்கள் இருக்குமே தவிர, எல்லா நாடுகளிலும் அடிப்படை ஒன்றுதான்.

ஜூலை 2017–இல் ஜிஎஸ்டி–யில் பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 67.83 லட்சம் என்றால், 2023 ஜூன் 25–ஆம் தேதி நிலவரப்படி அது 1.40 கோடியாக அதிகரித்திருக்கிறது. 2017–18 நிதியாண்டில், மாத சராசரி ஜிஎஸ்டி வருவாய் ரூ.89,885 கோடியாக இருந்தது. 2022–23–இல் ரூ.1,50,504 கோடியாக அதிகரித்திருக்கிறது. நிகழ் நிதியாண்டில் அதுவே ரூ.1,72,063 கோடியாக உயரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்துப் பொருள்களுக்கும் ஒரே வரி என்பதுதான் ஜிஎஸ்டியின் இலக்கு. இப்போதைக்கு 5%, 12%, 18%, 28% என நான்கு அடுக்கு வரிவிதிப்பு முறை அமலில் இருக்கிறது. மக்களின் அத்தியாவசியப் பொருள்கள் பெரும்பாலானவை வரி விலக்கும் பெற்றிருக்கின்றன. ஆடம்பரப் பொருள்களுக்கு அதிகபட்சமாக 28% வரி விதிக்கப்படுகிறது.

ஜிஎஸ்டி எதிர்நோக்கும் முக்கியமான பிரச்னை வரி ஏய்ப்பு. 40,000 போலி நிறுவனங்கள் மூலம் ரூ.13,900 கோடி அளவில் வரி ஏய்ப்பு நடந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ரூ.1,430 கோடிக்கான 'இன்புட் டாக்ஸ் கிரெடிட்' முடக்கப்பட்டிருக்கிறது. புதிதாக ஜிஎஸ்டிக்கு பதிவு செய்வோரை கண்காணிப்பதும், முறைகேடான போலி நிறுவனங்களை அடையாளம் காண்பதும் முன்னெடுக்கப்படும் முயற்சிகள்.

இந்தியா உலகின் ஐந்தாவது பொருளாதாரமாக மாறியிருப்பதற்கு ஜிஎஸ்டி முறையும் ஒரு முக்கியமான காரணம். தவறுகள் திருத்தப்பட்டு, குறைகள் களையப்பட்டு அனைத்துப் பொருள்களுக்கும் ஒரே வரி என்கிற இலக்கை அடையும்போதுதான், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக நாம் உயர முடியும்!

# காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்: ரூ.404 கோடி ஒதுக்கி அரசு உத்தரவு

சென்னை, ஜூலை 4: அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து, அதற்காக ரூ.404 கோடி நிதியை ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த விரிவாக்கத் திட்டம் ஜூலை இரண்டாவது வாரத்தில் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுதொடர்பாக சமூக நலத் துறைச் செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு வெளியிட்ட உத்தரவு:

முதல்வரின் காலை உணவுத் திட்டத்தால் ஏற்பட்ட நற்பயனை கருத்தில் கொண்டு, தமிழகத்தில் அனைத்து தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இதையடுத்து, நிகழ் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 'காலை உணவுத் திட்டம் வரும் கல்வியாண்டு முதல் அரசுத் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை படிக்கும்

## ஜூலை 2–ஆவது வாரத்தில் செயல்படுத்த வாய்ப்பு

மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

இதற்காக ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக, மாநகராட்சி, நகராட்சி, கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப்பள்ளி மாணவ, மாணவியருக்கு காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்த ரூ.33.56 கோடி ஒதுக்கி கடந்தாண்டு ஜூலை 27–ஆம் தேதி உத்தரவிடப்பட்டது.

அதன்பின், அடுத்த கட்டமாக 433 மாநகராட்சி, நகராட்சி நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை படிக்கும் 56,160 மாணவ, மாணவிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இந்த நிலையில், தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய நகர்ப்புற பகுதிகள், ஊரகப் பகுதிகளில் உள்ள அரசுப்பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை படிக்கும் 18.54 லட்சம் மாணவ, மாணவியருக்கு காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தவும், இதற்கு ரூ.539.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும் சமூக நலத்துறை இயக்குநர் சார்பில் தமிழக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

இந்த கருத்துருவை பரிசீலித்த தமிழக அரசு காலை உணவுத் திட்டத்தை நிகழ் நிதியாண்டுக்கு விரிவுபடுத்துவதற்கான உத்தரவுகளை வெளியிடுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில் நகர்ப்புறம், கிராமப்புறப் பகுதிகளில் செயல்படும் 31,008 அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை படிக்கும் 15 லட்சத்து 75 ஆயிரத்து 900 மாணவ, மாணவியர் பயன்பெறுவர். காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்ய ரூ.404 கோடி ஒதுக்கப்படுகிறது என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை உணவு விரிவாக்கத் திட்டத்தை ஜூலை இரண்டாவது வாரத்தில் நடைமுறைக்கு கொண்டு வர தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வான் பொய்ப்பினும் தான் பொய்க்காது!



வி.பி.கலைராஜன்

**1982-இல் அப்போதைய கர்நாடக முதல்வராக இருந்த குண்டு ராவ் (காங்கிரஸ்) காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டுவில் அணை கட்டப்படும் என்று அறிவித்தார். அடுத்து வந்த பாஜக அரசு அந்த அணை கட்ட ரூ. 9,000 கோடி ஒதுக்கீடு செய்தது. தற்போதைய கர்நாடக மாநில காங்கிரஸ் அரசு ரூ. 1,000 கோடி ஒதுக்கியுள்ளது.**

கட்டுரையாளர்:
முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்.